## சென்னையில் 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்துக்கு

# முதல்கட்டமாக ரூ.4,770 கோடி நிதி அளிக்க ஜப்பான் நிறுவனம் ஜெய்கா ஒப்புதல்

## ● புதுடெல்லியில் ஒப்பந்தம் கையெழுத்தானது

■ சென்னை

சென்னையில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்துக்கு ஜப்பான் நிதி நிறுவனமான ஜெய்கா, முதல்கட்டமாக ரூ.4,770 கோடி கடனுதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் புதுடெல்லியில் கையெழுத்தானது.

சென்னையில் தற்போது 35 கிமீ தூரத்துக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 10 கிமீ தூரத்துக்கான பணிகள் முடிக்கப்பட்டு வரும் ஜனவரியில் ரயில்சேவை தொடங்கவுள்ளது. இரண்டாவது கட்டமாக மாதவரம் - சிறுசேரி, மாதவரம் - சோழிங்கநல்லூர் மற்றும் கோயம்பேடு - வி.இல்லம் ஆகிய 3 வழித்தடங்களில் 107 கிமீ மெட்ரோ ரயில் திட்டத்துக்கான பணிகள் மேற்கொள்ள நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இதேபோல், புறநகர் பகுதிகளிலும் மக்கள் தொகை அதிகரித்து வருவதால், தற்போதுள்ள விமான நிலையம் வரையில் இருக்கும் மெட்ரோ ரயில் திட்டம், வண்டலூர் அருகே அமையவுள்ள கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையம் வரை விரிவாக்கம் செய்யப்படும் என முதல்வர் கே.பழனிசாமி ஏற்கெனவே அறிவித்திருந்தார். இதற்கான திட்டப்பணிகளை தொடங்குவதற்கான முதல்கட்ட ஆய்வுப் பணிகளும் விரைவில் தொடங்கவுள்ளன.

மெட்ரோ ரயில் நிறுவனம் மத்திய, மாநில அரசுகள் நிதி மற்றும் ஜப்பான் நாட்டின் நிதி நிறுவன கடன் வசதி மூலம் மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கிடையே, சென்னையில் 2-வது கட்ட மெட்ரோ ரயில் திட்டத்துக்கான கடன் வசதி பெறுவது குறித்து ஜப்பான் நாட்டின் நிதி நிறுவனமான ஜெய்காவுடன் தொடர்ந்து பல்வேறு கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இதற்கிடையே, 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் மாதவரம் - சோழிங்கநல்லூர் (35.67 கிமீ), மாதவரம் - கோயம்பேடு பேருந்து நிலையம் (16 கிமீ) வழித்தடங்களில் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மொத்தம் 52.1 கிமீ தூரத்துக்கு மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்துக்கான மதிப்பீடு மட்டும் மொத்தம் ரூ.40,941 கோடியாகும். இதில், ஜெய்கா நிறுவனம் ரூ.20,196 கோடி நிதி உதவி வழங்கவுள்ளது.

இந்நிலையில், மெட்ரோ ரயில் ரயில் 2-ம் கட்ட திட்டத்துக்கு முதல்கட்டமாக ரூ.4,770 கோடி கடன் உதவி வழங்கும் ஒப்பந்தம் புதுடெல்லியில் நேற்று முன்தினம் நடந்தது. இதில், மத்திய நிதி அமைச்சகத்தின் கூடுதல் செயலர் சி.எஸ்.மஹபோத்ரா, இந்தியாவுக்கான ஜப்பான் தூதர் கென்ஜி ஹிராமட்ஸு, ஜெய்கா நிறுவன தலைமை நிர்வாகிகள் ஆகியோர் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர்.

இந்த நிகழ்வின்போது, கூடுதல் தலைமைச் செயலாளர் டி.வி. சோமசுந்தரம், சென்னை மெட்ரோ ரயில் நிறுவன நிர்வாக இயக்குநர் பங்கஜ்குமார் பன்சல் ஆகியோர் உடனிருந்தனர்.

இதுதொடர்பாக மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறும்போது, "மத்திய, மாநில அரசு மற்றும் ஜெய்கா கடனுதவி மூலம் மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில், 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்துக்கு முதல்கட்டமாக ரூ.4,770 கோடி வழங்க ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதேபோல், மத்திய, மாநில அரசுகளின் நிதியைக் கொண்டு மெட்ரோ ரயில் பணிகள் மேற்கொள்ளப்படும். 2-ம் கட்ட திட்டத்தில் தற்போது நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பணிகள் முடிவடைந்தவுடன், டெண்டர் விடப்பட்டு நிறுவனம் தேர்வு செய்து பணிகள் தொடங்கப்படும்'' என்றனர்.